**UAPA.No.128.2023**

**PW.1** சாஜஹான்

26-02-2026 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**3 மற்றும் 4 எதிர்மனுதாரர்களின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது. ஆங்கிலமும் எழுத படிக்க தெரியாது,. எனக்கு மலையாளம் தாய்மொழி. மனு சொத்தை 2005 ல் வாங்கியிருப்பேன். சரியாக தேதி ஞாபகமில்லை. வாங்கும்பொழுது வீடு இருந்தது. பின்பு அதை அபிவிருத்தி செய்தேன். மனு சொத்து 1 - 1/4 செண்டில் அமைந்துள்ளது. மனு சொத்து கூட்டு குடும்ப சொத்து என்று நான் முதல் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளேன். காரணம் எனது சித்தப்பா அதை பயன்படுத்தி வந்ததால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். இந்த மனுவின் 5 ஆம் எதிர்மனுதாரர் எனது சித்தி மகன் ஆவார். அவரை சிறு வயதிலிருந்தே தெரியும். ஆனால் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியாவில் அவர் என்ன பொறுப்பில் இருந்தார் என்று எனக்கு தெரியாது. நான் இங்கு இல்லாததால் 5 ஆம் எதிர்மனுதாரர்தான் சொத்தை பராமரித்து வந்தார். எனது மற்றொரு தம்பி அபு மேற்பார்வை பார்த்து வந்தார். அவர்தான் 5 ஆம் எதிர்மனுதாரருக்கு மனு சொத்தை வாடகைக்கு விட்டார். அதற்கு முன் தொகை எதுவும் பெற்று கொள்ளவில்லை. வாடகையும் பெற்று கொள்ளவில்லை. கரண்ட் மற்றும் தண்ணீர் கட்டணங்களை அவர்கள் கட்டிக் கொள்வார்கள். நான் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியாவின் அனுதாபி என்பதால் முன்தொகை மற்றும் வாடகை

எதுவும் பெற்று கொள்ளாமல் வாடகைக்கு விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எந்த தேதியில் மனு சொத்தில் சீல் வைக்கப்பட்டது என்று எனக்கு தேதி நினைவில்லை. இந்த மனுவை எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்று எனக்கு நினைவில்லை. மனு சொத்தை சட்டப்படி 30 நாட்களுக்குள் தாக்கல் செய்யாததால் எனது மனு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. சட்டத்தின்படி தடை செய்யப்பட்ட இயக்கத்தால் பயன்படுத்தப்படாத இடமாக இருந்தால் மட்டுமே இவ்வாறான மனுக்கள் தாக்கல் செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பு மனு சொத்தை பயன்படுத்தி வந்ததாக நானே மனுவில் குறிப்பிட்டுள்ளதால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தடை செய்யப்பட்ட இயக்கத்தின்மீது உள்ள தடையை அரசு நீக்கினால் மட்டுமே மனு அனுமதிக்க இயலும் என்று சொன்னால் சரியல்ல. அந்த அமைப்பின்மீது தற்போது தடை இருப்பதால் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>5 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** இல்லை.

sd/ சாஜஹான்,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.